பொதுக் கட்டடங்கள் அனைத்தும், இச்சட்டத்தின் 6(1) பிரிவின் கீழ் உரிமம் பெற்றிருக்க வேண்டும். கட்டடங்கள் (உரிமம்) சட்டபிரிவின் 4(2) மற்றும் விதி 3(1) படி தமிழ்நாடு 1966ம் ஆண்டு பொதுக் கட்டடங்கள் விதிகளுடன் நிபந்தனைகளுடன் படிவம் ஏ-ல் விண்ணப்பிக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனவே சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் தண்டையார்பேட்டை, எழும்பூர் கோட்டாட்சியரிடம் விண்ணப்பிக்க வேண்டும் என சென்னை மாவட்ட கலெக்டர் வெ.அன்புச்செல்வன் தெரிவித்துள்ளார்.

## தாமரை பூ பறிக்க சென்றவர் தண்ணீரில் மூழ்கி சாவு

காஞ்சீபுரம், ஆக.4–

காஞ்சீபுரம் அடுத்த சாமந்திபுரம் பகுதியை சேர்ந்தவர் சுந்தரராஜன் (31). இவர் தண்டலம் கிராமத்தில் உள்ள ஒரு குளத்தில் தாமரை பூவை பறிக்க குளத்தினுள் இறங்கினார். அப்போது திடீரென கால் சேற்றில் சிக்கி தண்ணீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தார்.

இதுகுறித்து அவரது அண்ணன் ஞானம் காஞ்சீபுரம் தாலுக்கா போலீசில் புகார் செய்தார். புகாரின்பேரில் தாலுக்கா போலீஸ் இன்ஸ்பெக்டர் வெற்றிச்செல்வன் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

# பழைய ஓய்வூதிய திட்ட சாத்தியக் கூறுகளை ஆராயும் வல்லுனர் குழு: தலைவராக முன்னாள் ஐஏஎஸ் ஸ்ரீதர் நியமனம்

சென்னை, ஆக.4

பழைய ஓய்வூதியத் திட்டத்தையே தொடர்வதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட வல்லுனர் குழுவுக்கு புதிய தலைவராக முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி டி.எஸ்.ஸ்ரீதரை நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு பதிலாக ஏற்கனவே நடைமுறையில் இருந்த பழைய ஓய்வூதியத் திட்டத்தையே தொடர்வதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆராய மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா, ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அலுவலரான சாந்தா ஷீலா நாயர் தலைமையில் ஒரு வல்லுனர் குழு அமைக்க 26.2.16 அன்று ஆணையிட்டார்.

இந்த ஆணையின்படி குழு அமைக்கப்பட்டு பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்து அவர்களின் கருத்துகள் கேட்கப்பட்டது. இதற்காக 26.6.16, 15.9.16, 16.9.16, 22.9.16, 6.10.16, 2.12.16 மற்றும் 9.3.17 ஆகிய நாட்களில் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த நிலையில், மத்திய அரசு புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை மேம்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய 21.10.16 அன்று ஒரு குழுவை அமைத்தது.

இந்தக் குழுவின் பரிந்துரைகளையும் பரிசீலித்து வல்லுனர் குழு அறிக்கை தயாரிக்க இருந்தது. அந்த நிலையில் சாந்தா ஷீலா நாயர் தன் பதவியை ராஜினாமா செய்தார். எனவே, தமிழ்நாடு அரசு அமைத்த வல்லுனர் குழு தனது பணியினைத் தொடர்ந்து விரைவாக அறிக்கை சமர்ப்பிக்க ஏதுவாக ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி டி.எஸ்.ஸ்ரீதரை வல்லுனர் குழுவின் தலைவராக தமிழக அரசு நியமித்து ஆணையிட்டது.

அரசு அலுவலர்களின் ஓய்வூதியம் குறித்த அறிக்கையை வரும் நவம்பர் இறுதிக்குள் இந்தக்குழு சமர்ப்பிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


**ஈசாப் இந்தியா லிமிடெட்** ESAB

CIN:L29299TN1987PLC058738

பதிவு அலுவலகம் : பிளாட் எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058.

தொ.பேசி எண். 044-4228 1100, இ-மெயில்: investor.relations@esab.co.in

**ஜூன் 30, 2017 வரை முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்**

ரூ. லட்சத்தில் (EPS தவிர)

| வ. எண் | விவரங்கள் | முடிவடைந்த காலாண்டு ஜூன் 30, 2017 | முடிவடைந்த காலாண்டு ஜூன் 30, 2016 |
|---|---|---|---|
| | | தணிக்கை செய்யப்படாதது | |
| 1 | மொத்த செயல்பாடுகள் மூலம் வருமானம் | 13,969 | 12,857 |
| 2 | இக்காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரிக்கு முன், சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு முன்) | 1,394 | 1,337 |
| 3 | இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்) (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்) | 1,306 | 1,337 |
| 4 | இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்) (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்) | 907 | 923 |
| 5 | இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [இக்காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)] | 886 | 908 |
| 6 | சமபங்கு மூலதனம் | 1,539 | 1,539 |
| 7 | பங்கு விகித ஈட்டுத்தொகை (ஒவ்வொரு பங்கு ரூ 10/-) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) | | |
| | அ) அடிப்படை | 5.89 | 6.00 |
| | ஆ) குறைமதிப்பு | 5.89 | 6.00 |

**குறிப்பு:** மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான தணிக்கைச் செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்டவைகள் ஆகும். காலாண்டுக்கான தணிக்கைச் செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் கம்பெனியின் www.esabindia.com என்ற இணைய தளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனத்தின் BSE Limited மற்றும் NSE India Limited என்ற இணையதளத்திலும் காணலாம்.

ஈசாப் இந்தியா லிமிடெட்டுக்காக

சென்னை
3 ஆகஸ்ட், 2017

Strength through Cooperation
Visit our website : http://www.esabindia.com

ரோஹித் கம்பீர்
மேலாண்மை இயக்குனர்


**IN THE HONOURABLE COURT FAMILY JUDGE COURT AT VISAKHAPATNAM,AP**
**IA 769/2017**
**in**
**FCOP NO. 150/14**

Between:
Shubhojee Kar
... Petitioner/Petitioner

And:
A Preethy
... Respondent/Respondent

**NOTICE**

To
A Preethy,
W/o Shubhojee Kar,,
Resident of 178/1,
Poongadai Illam,
New Balaji Nagar Extension,
Selaiyur, CHENNAI.

Please take notice that the above named Petitioner/ Petitioner has instituted the above IA filed under Order 9 Rule 9 of CPC petition in the Divorce proceedings and the matter stands posted to 30-08-2017 for your appearance personally or through Advocate to attend before the Honourable Court at 10.30 AM, failing which the matter will be heard and determined in your absence exparte as per Law.

**Shubhojee Kar**
**C/o P.V.S.N. Gupta**
**P. Lakshmi Gupta**
Advocates,
VISAKHAPATNAM
Ph No.9440857013,


கார்ப்பரே

| வ எண் | |
|---|---|
| 1 | செ |
| 2 | கா அ |
| 3 | கா அ |
| 4 | கா அ |
| 5. | கா நி |
| 6 | செ |
| 7 | நி |
| 8. | ப அ எ |

குறிப்பு

1. SE நிதி பம் cor

இடம்:
தேதி: 0